


**18. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஸ்ரீஹரி கோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து
விக்ரம்-1 ராக்கெட் வெற்றிகரமாக இன்று விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இளம் தொழில் முனைவோர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. தமிழ்நாடு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, தமிழின் இனிமையும், உயரிய பண்பாடும், தழைத்தோங்கட்டும் என முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்தியுள்ளார்.

4. தமிழக அரசின் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் அடுத்தமாதம் முதல்வாரத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. மரியவில்சன் அறிவித்துள்ளார்.

5. ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் இறுதி போட்டிக்கு பி.வி. சிந்து முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

## விக்ரம் -1 ராக்கெட்

ஸ்ரீஹரி கோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்திலிருந்து Skyroot Aero Space தனியார் நிறுவனத்தின் விக்ரம்-1 ராக்கெட் வெற்றிகரமாக இன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

ஆக்மன் 4-ம் கட்ட திட்ட வெற்றியை அடுத்து, 450 கிலோ மீட்டர் சுற்றுப் பாதையில் விண்வெளி சூழல் தரவுகளுக்கான தொழில் நுட்பக் கருவிகளை துல்லியமாக நிலைநாட்டி சாதனை படைத்துள்ளது.

இந்த வெற்றியை தொடர்ந்து தனியார் விண்வெளி ஏவுதல் திறனில் உலகளவில் 3-வது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

விக்ரம் – 1 ராக்கெட் வெற்றிக்கு பாராட்டு தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திரமோடி நாட்டின் தனியார் விண்வெளித் திட்டத்தில் இது ஒரு மைல்கல் சாதனை என்றார்.

இளையோரின் துணிச்சலையும், தொழில்முனைவு திறனையும், உறுதியையும் இது வெளிப்படுத்துவதாக கூறிய பிரதமர், தம்மை சந்திக்க விக்ரம் – 1 விண்வெளி குழுவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஜீதேந்திர சிங்கும் இந்த வெற்றிக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

## ராஜ்நாத் சிங்

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி ஒருலட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் என்ற சாதனை அளவை எட்டியிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு துறை சார்ந்த கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், இந்த ஆண்டு இறுதிக்குள் இதனை 2 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய அரசின் பட்ஜெட்டில் 75 சதவிகிதம் ராணுவ தளவாடங்கள் நவீனமயத்திற்கும் தளவாட கொள்முதலுக்கும் ஒதுக்கப்பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

புதிய பாதுகாப்பு, பாதுகாப்பு கையகப்படுத்துதல், நடைமுறை திட்டம் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்படும் என்றும், இதன்மூலம தளவாட உற்பத்தி மேலும் வலுப்பெறும் என்றும் கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை என்பது அரசின் உறுதியான நிலைப்பாடு என்று கூறிய அவர், தேவைப்பட்டால் மறைவிடங்களுக்கே சென்று தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>நிர்மலா சீதாராமன்</u>

நாட்டின் அடுத்தக்கட்ட பொருளாதார வளர்ச்சியில் இளம் தொழில் முனைவோர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இளம் தொழில்முனைவோர் உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், உக்ரைன் போர், இஸ்ரேல், ஈரான் பதற்றம் உள்ளிட்ட உலகளாவிய சவால்களின் போது வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொது கட்டமைப்பின் மூலம் மாதந்தோறும் 20 பில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் நடைபெறுவதாக கூறிய அவர், இந்தியாவில் தற்போது இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் உள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்கள் உள்ளூர் தயாரிப்புகளை உலகளாவிய வணிகத்திற்கு கொண்டுசெல்வதில் சிறந்து விளங்குவதாகவும் கூறினார்.

துருவ ஆராய்ச்சி, விண்வெளி சாதனைகளில் இந்தியா தனது ஆராய்ச்சி பயணங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், நிலவின் தென் துருவத்தில் தடம் பதித்து சாதனை படைத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியாவிற்காகவும், உலகிற்காகவும், வரவிருக்கும் தலைமுறைகளுக்காகவும், உருவாக்குங்கள் ! தைரியமாக உருவாக்குங்கள் ! பொறுப்புடன் உருவாக்குங்கள் ! என்ற தாரக மந்திரத்துடன் இளம் தொழில்முனைவோர்கள் செயல்பட வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அரசு கலை அறிவியல் கல்லூரியில் உள்விளையாட்டு அரங்கத்தை இன்று திறந்து வைத்து பேசிய மத்திய பி.ஜே.பி. அரசு விளையாட்டிற்கு முன்னுரிமை வழங்குவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>மழைக்கால கூட்டத்தொடர்</u>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்குவதை ஒட்டி புதுதில்லியில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

அடுத்த மாதம் 13-ம் தேதிவரை நடைபெறும் கூட்டத்தொடரில் இரு அவைகளும் சுமூகமாக செயல்பட அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை கோரும் வகையில் இக்கூட்டத்திற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வருமான வரி சட்டத்திருத்த மசோதா, தொகுதி மறுசீரமைப்புடன் இணைந்த மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்திருத்த மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் இக்கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நாளையும்,

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்ளின் ஆலோசனை கூட்டம் நாளைமறுநாளும் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழ்நாடு நாள்

தமிழ்நாடு நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு. விஜய் வெளியிட்ட வாழ்த்து செய்தியில் தமிழின் இனிமையும், உயரிய பண்பாடும், மனிதநேய மரபும், தலைமுறைகள் கடந்தும் தழைத்தோங்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

கல்வி, தொழில்நுட்பம், மனிதவளம் உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கி தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்க இந்நாளில் உறுதியேற்போம் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

மரியவில்சன்

த.வெ.க. தலைமையிலான தமிழக அரசின் முதல் பட்ஜெட் அடுத்தமாதம் முதல்வாரத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. மரியவில்சன் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பட்ஜெட்டில் தமிழகத்திற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் இடம்பெறும் என்றார்.

நிதிநிலை அறிக்கை தயாரிப்பிற்காக முதலமைச்சர் 15 நாட்கள் அய்வுகூட்டம் நடத்தி அமைச்சர்களுடனும், செயலர்களுடனும் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டு அதில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து எடுத்துரைத்திருப்பதாக கூறினார்.

தமிழக அரசின் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மக்கள் அனைவரும் முழுமையான வரவேற்பு அளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் நீர்வளத் துறையின் கீழுள்ள புறவழி கால்வாய் மூலம் 46 குளங்களுக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பான ஆய்வுகளை அவர் மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

<u>செங்கோட்டையன்</u>

தமிழகத்தில் தகுதியானவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், விண்ணப்பங்களை பரிசீலித்த பின்னர் இதுதொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>ஆதவ் அர்ஜுனா</u>

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் 10 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட உலகத்தரத்திலான செயற்கை இழை ஹாக்கி மைதானத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா இன்று காலை திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஹாக்கி போட்டிகளை தொடங்கி வைத்த அமைச்சர், விளையாட்டுத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

முறைக்கேடு

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலங்கள் முறைக்கேடாக பத்திர பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக C.B.C.I.D. போலீசார் நெல்லையில் இன்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து எமது நெல்லை செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

சட்டக்கல்லூரி

தூத்துக்குடி மாவட்டம் துளசி மகளிர் சட்டக்கல்லூரி,

தென்காசி மாவட்டம் எஸ்.தங்கப்பழம் சட்டக்கல்லூரி,

கன்னியாகுமரி மாவட்டம் முகில் சட்டக்கல்லூரி மீது ஒழுங்குமுறை விதிகள் மற்றும் இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் உத்தரவு மீறப்பட்டுள்ளதால், 2026 - 27 கல்வியாண்டிற்கான தற்காலிக இணைப்பு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இக்கல்லூரிகளில் முந்தைய கல்வியாண்டுகளில் அனுமதிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்ட மாணாக்கருக்கு தகுந்த தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரைக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பதிவாளர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பழனி – வாய்ஸ்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கான ரோப்கார் சேவை நாளை மறுநாள் முதல் நிறுத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

… வாய்ஸ் …

❖❖❖❖❖❖❖❖

## இருவரி

தூத்துக்குடி, தமிழ்நாடு கடல்சார் பயிற்சிக்கழகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. விஷ்ணு மஹாஜன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இங்கு பயிற்சி பெறும் மாணாக்கருக்கு வழங்கப்படும் பொதுமுறை மாலுமி பயிற்சிகள் உள்ளிட்டவை குறித்து அவர் கேட்டறிந்தார்.

தேனி மாவட்டத்தில் ஆதிதிராவிட பழங்குடியினர், நரிக்குறவ மக்களுக்கான நலவாரிய உறுப்பினர் சேர்க்கை, குடும்ப அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

ஆண்டிப்பட்டியை அடுத்த கடமலைகுண்டு பகுதியில் நடைபெறும் இம்முகாமில் அரசின் நலத்திட்டங்களும் வழங்கப்பட உள்ளதால் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித் தலைவர் திரு. வைத்திநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

## கோவில்

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலில் ஆடிதபசு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 26-ம் தேதியும், ஆடித்தபசு 28-ம் தேதியும் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

## பேட்மிட்டன்

ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் இறுதி போட்டிக்கு பி.வி. சிந்து முன்னேறியுள்ளார்.

இன்று காலை நடைபெற்ற அரையிறுதியில் சீனாவின் **Yu Fei Chen** னை 21-19, 15-10 என்ற செட்களில் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பி.வி. சிந்து - ஜப்பானின் **Yamaguchi** யை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

<u>கால்பந்து</u>

FIFA உலக கோப்பை கால்பந்து இறுதிப் போட்டி நாளை நடைபெறுகிறது.

நியூஜெர்சியில் அர்ஜென்டினா – ஸ்பெயின் இடையேயான இறுதியாட்டத்தை உலகம் முழுவதிலும் உள்ள கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖